தினமலர்

உண்மையின் உரைகல்

DINAMALAR

National Tamil Daily

# மலைகளுக்கு யாரால் ஆபத்து?




■ சர்வதேச மலை தினத்தை முன்னிட்டு, வன மரபியல், மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின், சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் நடந்த நிகழ்ச்சியில், 'நிலையான மலை சுற்றுலா' குறித்த விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப்பட்டது.

**கோவை, டிச. 12–**

''பொறுப்பற்ற மனித நடவடிக்கைகளால், மலைகள் ஆபத்தில் உள்ளன,'' என, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குனர் குன்னிகண்ணன் பேசினார்.

சர்வதேச மலைகள் தினத்தை முன்னிட்டு, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின், சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் (இ.என்.வி.ஐ.எஸ்.,) விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது.

இயக்குனர் குன்னி கண்ணன் பேசுகையில், ''மலை சுற்றுலா, சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் வனவிலங்குகளை பாதுகாக்கிறது. சமூக பொருளாதார நன்மைகளை வழங்குகிறது. நமது நாடு உலகின் மிகப் பெரிய மற்றும் மிக அழகான மலைத்தொடர்கள் சிலவற்றின் தாயகமாக உள்ளது.

அவற்றின் உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகள் பொறுப்பற்ற மனித நடத்தையால் ஆபத்தில் உள்ளன. மலை சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க அனைவரும் கைகோர்க்க வேண்டும்,'' என்றார்.

இதன் ஒரு பகுதியாக, 'நிலையான மலை சுற்றுலா' என்ற கருத்தை மையமாகக் கொண்டு, ஆன்–லைன் ஓவியப் போட்டி நடத்தப்பட்டது; வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. பங்கேற்ற அனைவருக்கும் இ–சான்றிதழ் வழங்கப்பட்டது.

விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப்பட்டு, மின்னணு முறையில் பகிரப்பட்டன.

நிறுவனத்தின் முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், இ.என்.வி.ஐ.எஸ்., மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

74. News in Dinamalar, Coimbatore, 12.12.2021, Observance of International Mountain Day 2021 by IFGTB ENVIS.